# பாண்டிக் கொடுமுடி வரலாறு காட்டும் நிலவியல் பண்பாடு

***முனைவர் இரா. மணிமேகலை***
இணைப்பேராசிரியர், தமிழ்த் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383325

*பண்டைய தமிழ்நாடு சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு தொண்டை நாடு, கொங்கு நாடு என ஐந்து பிரிவுகளாகப் பிரிந்திருந்தன. குறிஞ்சி மலையும் முல்லை வளமும் மருத வயலும் கொண்டது கொங்கு நாடு. குன்று கெழுநாடு என்று புலவர்களும் போற்றினர். மலைகள் நிறைந்த கொங்கு நாட்டில் தேன் மிகுதியாகக் கிடைத்தது. தேனுக்கு மற்றொரு பெயர் கொங்கு என்பதாகும். சங்கப்பாடல்கள் இப்பொருளில் தான் கொங்கு என்ற சொல்லை வழங்குகின்றன.*

***கொங்கு முதிர் நறு விழை (குறிஞ்சிப்பாட்டு - 85)***
***கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி***
***(குறுந்தொகை-1)***

*இப்பாடல்களில் கொங்கு என்ற சொல் தேன் பொருளில் கையாளப்படுகிறது.*

*கொங்கு நாட்டில் ஏழு சைவத்தலங்கள் சிறப்புடையன. அவற்றைப் பாடல் பெற்ற தலங்கள் என்று அழைப்பர். அவை கரூர், வெஞ்சமாக் கூடல், பவானி, அவிநாசி, திருமுருகன் பூண்டி, திருச்செங்கோடு, திருப்பாண்டிக் கொடுமுடி என்பனவாகும்.காவிரி நதியின் மேற்கரையில் அமைந்துள்ளது திருப்பாண்டிக் கொடுமுடி திருத்தலம். அத்தலத்திற்குரிய வரலாறுகளில் பதிவாகியுள்ள நிலவியல் பண்பாடு குறித்த பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது.*

## கறையூர்

*திருப்பாண்டிக் கொடுமுடியின் பழைய பெயர் கறையூர் என்பதாகும். கறைசை என்றும் வழங்கப்படுகிறது. பழம் பாடல்களிலும் கல்வெட்டுகளிலும் இவ்விரு பெயரும் இடம் பெறுகிறது. சுந்தரர் தேவாரப் பதிகத்தில் கறையூர் என்ற பெயர் கூறப்படுகிறது.*

*முப்போகம் விளையும் நஞ்சை நிலங்கள் சூழ்ந்தது கொடுமுடி. பவானி ஆறு காவிரியில் கலக்கப்படுவதற்கு முன்பு கட்டப்பட்டுள்ள காளிங்கராயன்வாய்க்கால்மூலம்கிடைக்கும் நீரினால் வயல்கள் வளமடைகின்றன. பணப்பயிர்கள் என்று கருதப்படும் கரும்பு வாழை மஞ்சள் செழித்து வளர்கின்றன.*

*சுந்தர மூர்த்தி நாயனார் காலத்திற்கு முன்பே கொங்கு நாட்டின் எல்லைகள் நிலை பெற்றிருந்தன. பெரியபுராணம் சோழநாட்டு ஈங்கோய் மலையைக் கடந்து கொடு முடியில் கால் வைத்தவுடன் கொங்குநாடு அடைந்து விடலாம் என்று காட்டுகின்றது.*

*பழங்காலத்தில் உயர்ந்த மலைகளையும் ஆழ்ந்தகன்றகாடுகளையும் கொண்டிருந்தது.*

## மாவீரன் கொடுமுடி

***சங்ககாலத்தில் கொடுமுடி' என்றபெயரில்குறுநில மன்னன் ஒருவன் இருந்துள்ளான். அவனது கோ நகரம்***
***ஆமூர் ஆகும், கோட்டை, கொத்தளங்களுடன், பாதுகாப்பு***
***மிக்கது அந்த ஆமூர். ஆமூர்க் கோட்டையில், மறைந்திருந்து***
***பகைவர்களைத் தாக்கப் பொய்யறைகள் பல இருந்தன.***

*அதன் புகழ் நெடுந்தொலைவு பரந்திருந்தது. இடி மோதும் உயரத்தை உடையதும், நன் மணப் பூக்கள் நிறைந்ததுமான குறும்பொறை மலையின் கிழக்கே அமைந்திருந்தது அந்*

நகரம், அந்நகர் மீது படையெடுத்து வந்த வானவன் ஒருவனின் மதங்கொண்ட யானைப்படை, ஆமூர்க் கோட்டையில் முட்டி மோதியதன் விளைவாக அவற்றின் கொம்புகள் ஒடிந்தனவே தவிர கோட்டை இடியவில்லை. வீரன் கொடு முடியின் வாள்வீச்சாலும், படைத்திறத்தாலும் அவ்யானைகள்

***தம் கொம்புகளை ஒடித்துக்கொண்டு திரும்பி ஓடிவிட்டன.***

***அந்த வானவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆவன். இமயவரம்பனின் தம்பியாவான். பின்னர் அரியணை ஏறிய செங்குட்டுவனின் சிறிய தந்தையாவான்.***

கொடுமுடிக்கு அருகில் இருக்கும் ஆமுரைக் குறித்து ஆவூர் காவிதிகள் சாதேவனார் அகநானூறு 159 வது பாடலில் பாடியுள்ளார். அதில் அந்நகரின் தோற்றத்தையும் மக்களையும் பற்றி பதிவு செய்கின்றார். தெண்கழி என்னும் உப்புவயலில் விளைந்த வெள்ளைக் கல்லுப்பை விலை கூறிக்கொண்டு, கழுத்தில் வலிமை கொண்ட எருதுகள் பூட்டிய வண்டிகளை வரிசையாக உமணர்கள் ஓட்டிச் செல்வர். வழியில் சமைத்து உண்டு, சமைத்த அடுப்புகளை அப்படியே விட்டுச் செல்வர்.வடித்த கூர்மையான அம்பும், கொடுமை செய்யும் வில்லும் கொண்ட ஆடவர் தம் வில்லை வளைத்துக்கொண்டு, பசுக் கூட்டத்தைக் கவர்ந்து செல்வர். எதிர்த்தவர்களோடு போராடி வெற்றி கண்டவர் தம் துடியை அடிப்பர். துடியில் பண் முழக்குவோர் உவலைப் பூ மாலை அணிந்திருப்பர். இவர்கள், உமணர் விட்டுச் சென்ற அடுப்பில், தாம் வேட்டையாடியவற்றை வாட்டித் தின்பர். பல வழிகள் பிரியும் கடும்பாதையில் இது நிகழும். இந்த வழியில் காதலர் சென்றுள்ளார் என்று அவலம் கொள்ளாதே, தோழி அந்த ஆமூர் நீண்ட மதில் சுவரைக் கொண்டது. மறைந்திருந்து தாக்கும் குகைகளைக் கொண்டது. அந்த ஆமூர் வாழ்க்கையே காதலர்க்குக் கிடைப்பதாயினும் பூண் அணிந்த உன் மார்பில் பொருந்திக் கிடப்பதை மறந்து ஆமூரில் தங்கியிருக்க மாட்டார், உன் காதலர்.

**பாலைக் கவுதமனார்**

பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தில் கொடுமுடியை எதிர்த்த பலியான செல்கெழு குட்டுவனை பாலைக் கவுதமனார் பாடுகின்றார்.

பல்யானைச் செல்கெழு குட்டுவனின் யானைப்படை பெரும்புகழ் பெற்றது. ஒரு பகற்பொழுதில் வங்கக் கடல் நீரும், அரபிக் கடல் நீரும் ஒரு சேரக் கொண்டு வரக் கூடியவை. தனது படை தோற்று விட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பல்யானைச் செல் கெழு குட்டுவன் தானே முன்னின்று படையெடுத்து வந்து கொடு

முடியை வென்று ஆமூர்க் கோட்டையைத் தரை மட்டமாக்குகிறான். புரவிப் படை, வேழப்படை, தேர்ப்படை, காலாட் படை அனைத்தையும் அனுப்பிப் போரிடுகிறான். ஐயவி என்னும் பொறியால் கோட்டைக்குள் வில் மழை பொழிகிறான். அகப்பா எனப்படும் உள்ளரணையும் தாக்கி ஆமுரை அழித்தே விடுகிறான். போர் வெற்றிக்குப்பின் அவனது படையினர் நொய்யலாற்றில் இறங்கி நீர் விளையாடியபோது எழுந்த குரலோசை பேய்களையும் அலற வைத்தது, (பதிற்றுப்பத்து - 92) என்கிறது பதிற்றுப்பத்து. இப்பாடலில் கொங்கு நாட்டின் வாழ்வியலை பதிவு செய்கின்றார் கொங்குநாடு ஒரு வகையில் பாறை நிலம் எனலாம். எனவே பாறைகள் இரும்பு உளியால் உடைக்கப்பட்டு நீர் கிணறுகள் உண்டாக்கப்பட்டன. சிறறு என்பது மிகச் சிறிய நீரூற்று. பத்தல் என்பது தண்ணீர் இறைக்கும் வாளி. பத்தலை கயிற்றில் கட்டி ஆழ் கிணற்றில் அவர்கள் தண்ணீர் இறைத்து எடுத்துக் கொள்வர். ஆடு மாடுகள் மேய்த்து கொங்கு மக்கள் வாழ்ந்து வந்தனர். கயிறு குறு முகவை என்று இப்பாடலுக்குத் தலைப்புள்ளமையால் இந்த நிலத்தின் இயல்பு விளக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மீது படையெடுத்துச் சென்று குட்டுவன் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டான் என்கிறார் பாலைக்கௌதமனார் .ஆமுர் நெய்யல் ஆற்றங்கரையில் இருந்ததை இங்கு நினைவு

கொள்ளலாம். இந்த ஆமுரிலிருந்து சுமார் 10 கல் தொலைவில் உள்ளது திருப்பாண்டிக் கொடுமுடி என்ற ஊர். பேரரசனை வலிமையுடன் எதிர்த்துப் போரிட்டு உயிர் துறந்த மாவீரன் கொடுமுடியின் நினைவாகவே இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

கொடுமுடி இறந்ததும், அந் நாட்டின் அரசினை ஆட்சி மேற்கொண்ட பெருமன்னனான பல்யானைச் செல் கெழுகுட்டுவனை அண்டிப் பல நன்மைகளை அடைந்தார் பாலைக் கௌதமனார். இவர் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர், தான், தன் மனையாளோடு சுவர்கம் செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதற்காகப் பல யாகங்கள் செய்ய வேண்டுமென்றார். இவரது விருப்பங்களைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பூர்த்தி செய்து யாகங்கள் செய்ய உதவினான். வயதில் முதிர்ந்த பார்ப்பனரைக் கொண்டு சிறந்த முறையில் ஒன்பது யாகங்கள் நடை பெற்றன. பத்தாவது யாகத்தின் இறுதியில், பாலைக் கவுதமனாரும் அவரது மனைவி பார்ப்பினியும் மறைந்து விட்டார்கள் அதாவது மக்கள் கண்ணில் காணாராயினர் என்று பதிகம் கூறுகிறது..

### சோழன் பூர்வபட்டயம் காட்டும் கொடுமுடி

கொங்கு நாட்டைச் சீர்திருத்தம் செய்து ஆட்சி முறையைச் செய்பம் செய்ய கரிகாலன் தன் பரிவாரங்களுடன் வருகிறான். பல ஊர்களில் கோயில் கட்டி குளம் வெட்டி விழா எடுக்கிறான். அந்த வகையில் கரூரிலிருந்து கொடுமுடிக்கு வருகிறார்கள். கொடுமுடியில் ஒவ்வொரு சாதிக்கு ஒரு தலைவரை நியமிக்கிறான் . கோயிலுக்கு மானியம் விட்டு கல்லிலும் ஓலையிலும் எழுதி தருகிறான்.

### தேவாரத்தில் கொடுமுடி

***சைவ சமய நற்குரவர்கள் நால்வருள் முதல் நின்ற திருஞான***
***சம்பந்தரும் இரண்டாமவராக எண்ணப் பெறும் திருநாவுக்கரசரும்***

ஒரே கால எல்லையில் வாழ்ந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட அருட்குரவராவர். மூன்றாமவராகிய திருநாவலூரர் நம்பியாரூரர் எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எனவும் போற்றப் பெறுபவர். முன்னுள்ள இருபெருந்தகைகளின் கால அளவைக்குப் பின்னே ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்குப் பின்னர் வரலாற்றுப் பெருமை மிக வாழ்ந்தருளிய அருளாளர். இனி, நான்காமவராகிய மாணிக்க வாசகப் பெருந்தகை மேலே காட்டப் பெற்ற மூவருக்கும் முந்தியவரா பிந்தியவரா என்ற ஆய்வு இன்று வரை முடிவு பெறாததாக அமைந்துள்ளது.

‘கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவ’ என்று தேவாரப் பாடல் கூறும். கோயிற் கல்வெட்டுக்கள் திருப் பாண்டிக் கொடுமுடியார், கொடுமுடி மகாதேவர், திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடையநாயனர் என்றும் ஆண்டவனே அழைக்கின்றன.

திருபாண்டிக் கொடுமுடி ஈசனின் திருமாமம் தற்போது மகுடேசுவரர், மகுடலிங்கர், கொடுமுடி நாதர் எனப் பலவாறாக வழங்கி.வருகின்றது. மகுடேசுவர் என்பது கொடுமுடி என்பதன் வடமொழிவழக்கு ஆகும். தேவாரகாலத்திலும், வேள்விக்குடிச் செப்பேட்டுக் காலத்திலும் பாண்டிக் கொடுமுடி என்றேஅழைக்கப்பட்டது

சமயக் குரவர்கள் நால்வரும் திருப்பாண்டிக் கொடுமுடியைப் பாடுகின்றனர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர் மூவரும் முறையே ஒரு பதிகம் பாடுகின்றனர். மணிவாசகர் “அரிய பொருளே அவிநாசியப்பா பாண்டி வெள்ளமே” என்று பாடுகின்றார்.

இரண்டாம் குலோத்துங்கன் காலமாகிய கி.பி 1138 முதல் 1145 வரை அமைச்சராக பணியாற்றியவர் சேக்கிழார் .அக்கால தமிழ் நாட்டின் எல்லைகள் சமுதாய பண்புகள் முதலியவற்றை தெளிவாகத் தந்துள்ளார். அதில் ஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில் தரிசனம் முடித்துக் கொண்டு முப்பரி நூலுடன் தோலணி மார்பர் முனிவரோடும் செப்பரும் சீர்திருப்பாண்டி கொடுமுடி சென்றடைந்தார்.

*பருவம்மாறாத பொன்னி நதிசூழ்ந்து பாண்டிக்கொடுமுடியார் பாதம் மருவி வணங்கி வளமிக்க தமிழ் மாலை சாத்தி மகிழ்ந்தார் என்று பெரியபுராணம் 338 வது பாடலில் கூறுகின்றார்.*

## திருஞானம்பந்தர்

***பண்ணமர் பாடலினாரும் பாண்டிக் கொடு முடியாரே***
***பறை வளர் பாடலினாரும் பாண்டிக் கொடு முடியாரே***
***பாகமுகந்தவர் தாமும் பாண்டிக் கொடு முடியாரே***

*என்று கொடுமுடி இறைவரைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.*

*மேலும்*

***கானமர் மஞ்ஞைகளாலுஞ் காவிரிக் கோலக் கரை மேல்***
***பானல நீறணி வாரும் பாண்டிக் கொடுமுடியாரே***
***பா.7***

*காடுகளில் மயில்கள் அகவுகின்ற காவிரியின் கரைமேல் உள்ள பாண்டிக் கொடுமுடியில் பால் போன்ற திருநீறு அணிந்த இறைவன் அருள் செய்கின்றார் என்கிறார்.*

***கருந்திரை மாமிடற் றாருங் காரகில் பன்மணி யுந்திப்***
***பரந்திழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடி யாரே பா.8***

*கருநிற அகில், பல்வகை மணிகள் ஆகியவற்றை அடித்துக் கொண்டு வரும் காவிரியின் அருகில் உறைபவர் என்று போற்றுகின்றார்.*

***மருமலி மென்மலர்ச் சந்து வந்திழி காவிரி மாடே***
***பருமணி நீர்த்துறை யாரும் பாண்டிக் கொடுமுடி யாரே பா. 9.***

*மணம் கமழும் மென்மலர்கள், சந்தனம் ஆகியவற்றுடன்ஓடி வரும்காவிரித்துறையில் கொடுமுடி இறைவர் அருள் செய்கின்றார்.*

*சித்தர், தேவர் முதலியோருடன் பத்தர்கள் பலரும் பல்வகை மலரால் பணிந்து வணங்கும் கொடுமுடி என்று வாழ்த்துகின்றார்.*

*திருநாவுக்கரசர் கொடுமுடிக்குப் பாடிய பதிகத்தில் ஐந்து பாடல்களே கிடைத்துள்ளன. ஐந்து பாடல்களும் கொடுமுடி இறைவன் அருளும்திறத்தைஅற்புதமாகவிவரிக்கின்றன.*

***திருக்கொடு முடி என்றலுந் தீவினைக்***
***கருக்கெடும் இது கைகண்ட யோகமே பா.5***

*என்று பாடுகின்றார்.*

## சுந்தரரின் நமசிவாயப்பதிகம்

*ஐந்தெழுத்து என்று கூறப்படும் நமசிவாய மந்திரத்தை மகுடமாக அமைத்துத் தேவார மூவரும் பதிகம் பாடியுள்ளனர். மணிவாசகரின் திருவாசகம் நமசிவாய வாழ்க என்றே தொடங்குகிறது. ஐந்தெழுத்தும் ஐந்து உள்ளுறைப் பொருள்களைக் கொண்டது. சி - இறைவன், வ - கருணை, ய-உயிர்கள், ந - உலகம், ம - ஆணவம் என்னும் பொருள்களை உள்ளடக்கியது ஐந்தெழுத்து மந்திரம்.*

*கொங்கு நாட்டில் காவேரிக்குத் தென்கரையில் கறையூர் எனப் பெயர் கொண்ட திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் தலத்திற்கு சுந்தரர் சென்று உள்ளத்தில் அன்பு பெருக ஈசனை மறக்கவொணா ஆர்வத்தினால், நமசிவாயப் பதிகம் பாடினார் என்று பெரியபுராணம் காட்டுகின்றது. அப்பதிகத்தை உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் என்றும் கூறுகின்றார். இப்பதிகத்தில் கொடுமுடியின் நிலத்தையும் மக்களையும் பதிவு செய்துள்ளார்.*

*சுந்தரர் தலங்கள் தோறும் சென்று தேவாரங்கள் அருளிச் செய்த போது மூன்று முறை கொங்கு நாட்டுக்கு வருகை தந்துள்ளார். அவர்வந்தகாலத்தில் மதுரையில் வரகுண பாண்டியனும் கொடுங்கோளூரில் சேரமான் பெருமாள் நாயனாரும் சேதி நாட்டில் நரசிங்க முனையரையரும் அரசு புரிந்துள்ளனர். காஞ்சியில் பல்லவர்கள் பலவீனமடைந்திருந்த அந்த நேரத்தில் சோழர்கள் ஆதிக்கம் தலை தூக்கவில்லை. வடக்கே சாளுக்கியர்களின் ஆதரவுடன் கங்க பல்லவர்கள் கொங்கு நாட்டை அரசாண்டார்கள். அக்காலத்தில் தான் சுந்தரர் கொடுமுடிக்கு வருகை புரிந்துள்ளார்..*

***'கற்றவர் தொழுதேத்தும் சீர்க் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி***
***நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயே (பா.1)***
***நல்லவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக்கொடுமுடி (பா.4)***

*கற்றவர்கள், நல்லவர் வணங்கித் துதிக்கின்ற கறையூர் என்கிறார். கறையூர் என்பது தலத்தின் பெயர். பாண்டிக் கொடுமுடி என்பது கோயிலின் பெயர்.*

***'வட்ட வாசிகை கொண்ட டி தொழுதேத்தும் பாண்டிக் கொடுமுடி' (பா.2)***

*நீர் மிகுந்து வரும் காவிரியாறு தன்னில் விழுந்த பல்வகை மலர்களையும் மணிகளையும் திரட்டி வலம் சுழித்து வந்து வட்ட வாசி கையாக வளைவாக இறைவன் திருவடியை வணங்குகிறது. அதாவது வடக்கே இருந்து ஓடி வந்த காவிரி இங்கு கிழக்கு நோக்கித் திரும்புகிறது. அதனை வட்ட வாசிகை கொண்டு ஈசனடி தொழுவதாக சுந்தரர் பாடுகின்றார்.*

***"காவிரியின் நதிநீர்ப் பண்பாட்டை இப்பதிகம் முழுவதும் பதிவு செய்கின்றார் சுந்தரர்.***
***கிளர்புனல் காவிரி (பா.3)***
***அந்தண் காவிரிப் பாடு தண்புனல் (பா - 6)***
***கொடு முடியில் வாழும் பெண்கள் காவிரியில் நீராடியதை***
***பஞ்சின் மெல்லடி பாவைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி (பா.5)***
***குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி" (பா.7)***

*என்கிறார்.*

*காவிரியின் அருகில் உள்ள ஊரான கொடுமுடியில் மரக்கிளையில் குயில் கூவிட அழகு மயில்கள் ஆடிடும் என்கிறார் அந்தார்.*

*காவிரிக்கோட்டிடைக் கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி (பா.8).*

**முடிவுரை**

*உலக மக்கள் இனத்தவர் பலர். அவர்களுடைய வடிவும் பண்பும் வாழ்வியல் நெறிகளும்பலவாகும். ஒருநாட்டின்நிலவியல் பண்பாட்டு நிலைக்களன் அந்நாட்டில் வாழும் மக்களைச் சூழ்ந்துள்ள வளங்களைப் பொருத்து அமையும். அவ்வகையில் பாண்டிக்கொடுமுடியின் நிலவியல் சங்க காலம் முதல் பிற்காலம் வரை தொடர்ந்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கொடுமுடியின் ஒவ்வொரு கூறும் அதன் நிலைக்கேற்பத் தனிமைப் பண்பும் நிலவியல் அமைப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டு மிளிர்கிறது.*